**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு நீட்டித்தது – மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு (Exemption) ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நலத் (அ.ந.மு) துறை**

அரசாணை (நிலை) எண்.5 நாள் 21 .05.2020

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.23.03.2020.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 24.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.2, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.31.03.2020.
4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 15.04.2020.
5. அரசாணை (நிலை) எண்.3, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.17.04.2020.
6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 03.05.2020.

மீள படிக்கப்பட்டது:

7. அரசாணை (நிலை) எண்.4, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.5.5.2020.
8. தலைமைச் செயலாளர், பொதுத்துறை கடிதம் எண் CSCR/130-216/2020, நாள் 17.05.2020.
9. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 17.05.2020.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தவிர்க்க அத்தியாவசிய பணிக்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் பணியாற்றிடவேண்டும் எனஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக, நான்காவதாக மற்றும் ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு துறைகளிலும் உள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தடை உத்தவு பிறப்பிக்கப்பட்ட நாளான 24.03.2020 முதல் 17.05.2020 வரையிலான காலங்களுக்கு அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) மேலே மூன்றாவதாக, ஐந்தாவதாக மற்றும் ஏழாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஒன்பதாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளிகள் பணியாளர்களுக்கு மட்டும் தங்கள் அலுவலக பணிகள் மேற்கொள்வதிலிருந்து 18.05.2020 முதல் 31.05.2020 வரையிலான

Scanned with CamScanner

காலங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் அலுவலக பணிகள் மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 3ல் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளிகள் பணியாளர்களுக்கு மட்டும் அவர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தடை உத்தரவு நீட்டிக்கப்பட்ட நாளான 18.05.2020 முதல் 31.05.2020 வரை அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை–5.
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள்,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து துறைத் தலைவர்கள்,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/5/2020
பிரிவு அலுவலர்
21/5/2020

Scanned with CamScanner